

கொளத்தூரில் நேற்று (5.8.2025) பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகைதந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# கொளத்தூரில் திட்டப் பணி: முதல்வர் தொடங்கிவைத்தார் !

முதல் பக்கத் தொடர்ச்சி

**அடிக்கல் நாட்டப்பட்ட பணிகள்:**

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் 11.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 29,514 சதுர அடி கட்டட பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ள புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம், பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்கு பிரிவு, போக்குவரத்து காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டடம்;

கொளத்தூர், ரெட்டேரியில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்;

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6வது மண்டலம், 70வது வார்டு, பில்கிங்டன் சாலையில் அமைந்துள்ள இரயில்வே ஆன்ஸ்லே வாய்க்கால் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மற்றும் மண்டலம் 6ல், 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69வது வார்டு, ரங்கசாமி தெரு மற்றும் லோகோ ஸ்கீம் 1வது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் வார்டு64, 65, 67, 69 ஆகியவற்றில் உள்ள ஒன்பது பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள்;

என மொத்தம் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூரில் தனியார் உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் சேதமடைந்த இருசக்கர வாகனங்களுக்கு மாற்றாக பாதிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு புதிய இருசக்கர வாகனங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கொளத்தூர் பகுதியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்!

# புது வலிமையைப் பெற்றேன் இன்று!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக.6-**

**உடல்நிலை காரணமாகத் தள்ளிப்போன கொளத்தூர் பயணம், நெடுநாள் பிரிந்திருந்த உணர்வைத் தந்தது. அந்த உணர்வு நீங்கி, இன்று புது வலிமையைப் பெற்றேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

கொளத்தூர் பகுதியில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உடல்நிலை காரணமாகத் தள்ளிப்போன கொளத்தூர் பயணம், நெடுநாள் பிரிந்திருந்த உணர்வைத் தந்தது. அந்த உணர்வு நீங்கி, புது வலிமையைப் பெற்றேன் இன்று!

இன்றைய கொளத்தூர் நிகழ்ச்சியில்,

- கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், ரூ.18.26 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்,
- பெரம்பூர், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.9.74 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்து வைத்து,
- கொளத்தூரில் புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம்,
- பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்குப் பிரிவு, போக்குவரத்துக் காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டடம்,
- ரெட்டேரியில் AC பேருந்து நிறுத்தம் என, ரூ.17.65 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினேன்!

நலம் விசாரித்து அன்பைப் பொழிந்த அனைவருக்கும் நன்றி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டின் உரிமைப் போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுப்போம்!

## “ஓரணியில் தமிழ்நாடு” - சிறப்புக் காணொளி வெளியிட்டு தி.மு.க. தலைமைக் கழகம் அழைப்பு!

சென்னை, ஆக.6-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என இணைந்து தமிழ்நாட்டின் உரிமை போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுப்போம் என்று தி.மு.க. தலைமைக்கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகவும், தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்கவும் ஓரணியில் தமிழ்நாடு எனும் மாபெரும் பிரச்சாரத்தை தி.மு.க. முன்னெடுத்துள்ளது. ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் கீழ் உறுப்பினர் சேர்க்கை முகாமை கடந்த ஜுலை 3ம் தேதி தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் மாநிலம் முழுவதும் பல்லாயிரக்கணக்கானோர் ஆர்வத்துடன் உறுப்பினர்களாக இணைந்து வருகின்றனர்.

இந்நிலையில், ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் அவசியம் குறித்து தி.மு.க. தலைமைக்கழகம் சிறப்புக் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது. நம் தமிழ்நாட்டின் அனைத்து குடும்பங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்றாய் நம் மண், மொழி, மானம், காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ என இணைந்து தமிழ்நாட்டின் உரிமை போராட்டங்களை உறுதியுடன் முன்னெடுப்போம் என்று தி.மு.க. தலைமைக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

### காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில்

# அடிப்படை வசதிகள் மற்றும் மாணவர்களின் குறைகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு கேட்டறிந்தார்!

சென்னை, ஆக.6-

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (04.08.2025) சென்னை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் புதிய கூடுதல் வகுப்பறை கட்டடத்தில் உள்ள வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிவறைகள் பராமரிப்பு ஆகியவற்றை நேரில் ஆய்வு செய்ததோடு, அங்குள்ள வசதிகள் குறித்தும், கல்வியின் அவசியம் மற்றும் தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வி திட்டங்கள் குறித்தும் பள்ளி மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயில் சார்பில் சென்னை, கீழ்ப்பாக்கத்தில் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 2021 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திடும் வகையில் ரூ. 11.15 கோடி செலவில் தரை மற்றும் மூன்று தளங்களில் 32 வகுப்பறைகள் மற்றும் 5 ஆய்வகங்கள், நூலகம், கழிப்பிட வசதிகள் மற்றும் மின்தூக்கி வசதியுடன் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடத்தை 27.06.2025 அன்று திறந்து வைத்தார். இக்கட்டடத்தில் வகுப்பறைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (04.08.2025) காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு நேரில் சென்று வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறை பராமரிப்பு ஆகியவற்றை ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, பள்ளி மாணவ, மாணவிகளிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொந்த நிதியில் வழங்கிய கல்விக் கட்டணம் மற்றும் கல்வி உபகரணங்களுடன்கூடிய புத்தகப்பை அனைத்து மாணவர்களுக்கும் கிடைத்ததா என்றும், மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மிதிவண்டிகள் குறித்தும், புதிய கட்டடத்தில் உள்ள வசதிகள் மற்றும் கூடுதல் தேவைகள் குறித்து கேட்டறிந்ததோடு, கல்வியின் அவசியம் மற்றும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பள்ளிக்கல்வி திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

மேலும், படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமெனவும், தேவையானபோது குடிநீர் எடுத்துக் கொள்ள வேண்டுமெனவும் அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பள்ளி முதல்வர் திருமதி ஜெயந்தி மற்றும் ஆசிரிய பெருமக்கள் உடனிருந்தனர்.



திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், வீரப்பாண்டி ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. முகாமில் கலந்துகொண்டு பயன் பெற்ற பயனாளிகளுக்கு உரிய ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன் கௌதமசிகாமணி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# உடல் உறுப்பு தானம் - தமிழ்நாடு முதல்நிலை!

## ஒன்றிய அரசு பாராட்டு!

புதுடெல்லி, ஆக.6-

மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் செய்தவர்களுக்கு தமிழ்நாடு அரசு அளிக்கும் மரியாதை, உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி உள்ளதாக ஒன்றிய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை திட்டத்தில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது என்றும் மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் செய்தவர்களின் இறுதிச் சடங்கில் அரசு மரியாதை அளிக்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு கடந்த 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவித்ததாகவும், அதனைத் தொடர்ந்து இது வரை மூளைச்சாவு அடைந்த உறுப்பு தானம் செய்த 461 பேருக்கு அரசு மரியாதை அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதல்முறையாக தமிழ்நாடு அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கையால், உறுப்பு மாற்றுத் திட்டத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மூளைச்சாவு அடைந்த 268 பேரிடம் இருந்து ஆயிரத்து 500 உறுப்புகள் மற்றும் திசுக்கள் தானமாக பெறப்பட்டதாகவும், அதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 664 சதவீதம் அதிகம் என்றும் தெரிவித்துள்ள ஒன்றிய சுகாதார அமைச்சகம், தமிழ்நாடு அரசின் இத்திட்டம் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைத் திட்டத்தில் புதிய அத்தியாயத்தை தொடங்கி உள்ளதாகவும் பாராட்டு தெரிவித்துள்ளது.



விழுப்புரம் மத்திய மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் டாக்டர் இரா இலட்சுமணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்துகொண்டு ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை குறித்து ஆலோசனைகள் வழங்கினார். மாவட்ட பொருளாளர் விழுப்புரம் இரா.ஜனகராஜ், மாநில ஆதி திராவிட நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், தொகுதி மேலிட பொறுப்பாளர்கள் துரை.கிசரவணன், எஸ்.கே.பி.கருணா, மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, ஆ.புஷ்பராஜ் உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.